ஜும்ஆ உரை (வெள்ளிக்கிழமை பிரசங்கம்)

தேதி: 15 ரபீஉல் அவ்வல் 1448 ஹிஜ்ரி / 28 ஆகஸ்ட் கி.பி 2026

# தலைப்பு : **அருட்கொடைகளைப் பாதுகாத்தல்**

அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. அவனை நாம் புகழ்கிறோம்; அவனிடமே உதவியும் பாவமன்னிப்பும் தேடுகிறோம். நமது உள்ளங்களின் தீமைகளிலிருந்தும், நமது கெட்ட செயல்களிலிருந்தும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம். அல்லாஹ் எவருக்கு நேர்வழி காட்டினானோ அவரை வழி கெடுப்பவர் எவருமில்லை; எவரை வழிகேட்டில் விட்டுவிட்டானோ அவருக்கு நேர்வழி காட்டுபவர் எவருமில்லை. வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை யாருமில்லை என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார்கள் என்றும் நான் சாட்சி கூறுகிறேன்.

﴿يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ ٱتَّقُوا۟ ٱللَّهَ حَقَّ تُقَاتِهِۦ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسْلِمُونَ﴾

"நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள்; மேலும், நீங்கள் முஸ்லிம்களாக அன்றி மரணிக்காதீர்கள்." (அல் குர்ஆன் 3 : 102).

## இறைதுதிக்குப் பின் :

வார்த்தைகளில் மிகவும் உண்மையானது அல்லாஹ்வின் வேதமாகும்; வழிகாட்டல்களில் மிகச் சிறந்தது முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிகாட்டலாகும். காரியங்களில் மிகவும் கெட்டது மார்க்கத்தில் புதிதாக உருவாக்கப்பட்டவையாகும்; புதிதாக உருவாக்கப்பட்டவை ஒவ்வொன்றும் பித்அத் (விஷமம்) ஆகும்; பித்அத் ஒவ்வொன்றும் வழிகேடாகும்; வழிகேடு ஒவ்வொன்றும் நரகத்திற்குரியதாகும்.

## அல்லாஹ்வின் அடியார்களே!

நம்மீது அல்லாஹ் புரிந்த அருட்கொடைகள் எண்ணற்றவை. அவனுடைய உபகாரங்கள் கணக்கிலடங்காதவை. அவன் நமக்கு எத்தனையோ நன்மைகளை வழங்கி, பல துன்பங்களிலிருந்து நம்மைக் காத்து, ஆபத்துகளையும் வேதனைகளையும் நம்மை விட்டுத் தூரப்படுத்தியுள்ளான்.

﴿وَءَاتَىٰكُم مِّن كُلِّ مَا سَأَلْتُمُوهُ ۚ وَإِن تَعُدُّوا۟ نِعْمَتَ ٱللَّهِ لَا تُحْصُوهَآ ۗ إِنَّ ٱلْإِنسَٰنَ لَظَلُومٌ كَفَّارٌ﴾

"நீங்கள் அவனிடம் கேட்டவை அனைத்திலிருந்தும் அவன் உங்களுக்குக் கொடுத்தான்; அல்லாஹ்வின் அருட்கொடைகளை நீங்கள் எண்ணத் தொடங்கினால் அவற்றை உங்களால் எண்ணி முடிக்க முடியாது. நிச்சயமாக மனிதன் பெரும் அநியாயக்காரனாகவும், நன்றிகெட்டவனாகவும் இருக்கிறான்."

(அல் குர்ஆன் 14 : 34). மனிதனின் பலவீனங்களில் ஒன்று, ஒரு அருட்கொடை தன்னை விட்டு நீங்கும் வரை அல்லது மறையும் வரை அதன் அருமையை உணர்வதில்லை. ஈமானும், பாதுகாப்பும் ஓர் அருட்கொடை; ஆரோக்கியமும், குடும்பமும் ஓர் அருட்கொடை; நீரும், மின்சாரமும் ஓர் அருட்கொடை; ஏன், உங்களது மார்பில் இயங்கும் ஒவ்வொரு மூச்சுக் காற்றும் அல்லாஹ்வின் அருட்கொடையே ஆகும்.

## இறைநம்பிக்கையாளர்களே!

முஃமின்களே! நிச்சயமாக அருட்கொடைகள் குர்ஆன் மற்றும் சுன்னா காட்டித் தந்த மார்க்க வழிகள் மூலமே பாதுகாக்கப்படுகின்றன. அதில் ஒன்று: பாவங்களை விட்டுத் தவிர்ந்திருப்பது. ஏனெனில் பாவங்களே அருட்கொடைகள் கைநழுவிப்போக முதன்மைச் சான்றாகும்.

﴿ذَٰلِكَ بِأَنَّ ٱللَّهَ لَمْ يَكُ مُغَيِّرًا نِّعْمَةً أَنْعَمَهَا عَلَىٰ قَوْمٍ حَتَّىٰ يُغَيِّرُواْ مَا بِأَنفُسِهِمْ ۙ وَأَنَّ ٱللَّهَ سَمِيعٌ عَلِيمٌ﴾

"இதற்குக் காரணம், ஏதேனும் ஒரு சமுதாயத்திற்கு தான் அளித்த அருட்கொடையை, அவர்கள் தங்களுக்குள் உள்ளதை மாற்றிக்கொள்ளாத வரை அல்லாஹ் மாற்றுபவனாக இல்லை என்பதால் தான்..." (அல் குர்ஆன் 8 : 53).

ஜுபைர் பின் நுஃபைர் (ரஹ்) கூறினார்கள்: "சைப்ரஸ் வெற்றி கொள்ளப்பட்டு, அதன் மக்கள் பிரிக்கப்பட்டபோது, அவர்கள் ஒருவரையொருவர் பிரிந்து அழுதனர். அபூதர்தா (ரலி) அவர்கள் தனியாக அமர்ந்து அழுவதைக் கண்டு, 'அபூதர்தாவே! அல்லாஹ் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் கண்ணியமளித்த இந்த நாளில் நீங்கள் ஏன் அழுகிறீர்கள்?' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், 'ஜுபைரே! படைப்பினங்கள் அல்லாஹ்வின் கட்டளையைப் புறக்கணிக்கும் போது அல்லாஹ்விடம் எவ்வளவு கேவலமானவர்களாகி விடுகிறார்கள்! நேற்று வரை அவர்கள் ஆதிக்கம் செலுத்தும் வெல்ல முடியாத சமூகமாக, ஆட்சியதிகாரத்துடன் இருந்தார்கள்; ஆனால் அல்லாஹ்வின் கட்டளையை விட்டதும், நீங்கள் பார்க்கும் இந்த நிலைக்கு ஆளாகிவிட்டார்கள்' என்றார்கள்."

அலி பின் அபீ தாலிப் (ரலி) கூறினார்கள்: "எந்தச் சோதனையும் பாவத்தின் காரணத்தினாலேயே தவிர இறங்குவதில்லை; தௌபா (மீளுதல்) மூலமே தவிர அது நீக்கப்படுவதில்லை."

இமாம் இப்னுல் கையிம் (ரஹ்) கூறினார்கள்: "மாறுசெய்வதன் தண்டனைகளில் ஒன்று அருட்கொடைகள் நீங்குவதும், வேதனைகள் இறங்குவதுமாகும்.

எத்தனையோ நபர்கள் சுகபோகத்திலும், வசதியிலும் வாழ்ந்தார்கள். ஆனால் அவர்கள் கீழ்ப்படிதலை கீழ்ப்படியாமைக்காகவும் பாதுகாப்பை சீர்கேட்டிற்காகவும் பரிமாறிக்கொண்டபோது அவர்களின் சூழ்நிலைகள் மாறி அவர்களின் நிலைமைகள் மோசமடைந்தன

பாவங்கள் அருட்கொடைகளை நீக்கிவிடுகின்றன. எனவே உங்களுக்கு கிடைத்த அருட்கொடைகளைப் பாதுகாருங்கள்.

மனிதகுலத்தின் இறைவன் தண்டிப்பதில் விரைவானவன். எனவே சர்வ படைப்புக்கும் அதிபதியான அல்லாஹ்வுக்கு கீழ்ப்படிதலால் அதிலிருந்து பாதுகாத்து கொள்ளட்டும்.

"அருட்கொடைகளைப் பாதுகாக்கும் வழிகளில் இன்னொன்று: அல்லாஹ்வுக்கு நன்றி (ஷுக்ரு) செலுத்துவதாகும். அல்லாஹ் கூறுகிறான்:

﴿وَإِذْ تَأَذَّنَ رَبُّكُمْ لَئِن شَكَرْتُمْ لَأَزِيدَنَّكُمْ ۖ وَلَئِن كَفَرْتُمْ إِنَّ عَذَابِي لَشَدِيدٌ﴾

"நீங்கள் நன்றி செலுத்தினால், நிச்சயமாக நான் உங்களுக்கு (எனது அருட்கொடைகளை) அதிகப்படுத்துவேன்; நீங்கள் மாறுசெய்தால், நிச்சயமாக எனது வேதனை மிகவும் கடுமையானது என்று உங்கள் இறைவன் அறிவித்ததை நினைவுகூருங்கள்." (அல் குர்ஆன் 14 : 7).

உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) கூறினார்கள்: "அல்லாஹ்வின் அருட்கொடைகளை நன்றியுணர்வின் மூலம் விலங்கிட்டுப் பூட்டுங்கள்."

மேலும் சில ஸலஃபுகள் இவ்வாறு கூறுவதுண்டு அதாவது நன்றியுணர்வு என்பது நம்மிடம் உள்ளதைப் பாதுகாக்கிறது. நம்மிடம் இல்லாததையும் ஈட்டித்தருகிறது.

நன்றி செலுத்துவது என்பது உள்ளத்தால் அருட்கொடையை ஒப்புக்கொள்வது, நாவினால் புகழ்வது, மற்றும் அந்த அருட்கொடையை இறைவனின் ஏவலுக்கு ஏற்ப பயன்படுத்துவது ஆகும்.

அருட்கொடைகளைப் பாதுகாக்கும் மற்றொரு வழி: பயன்பாட்டில் மிதமிஞ்சாமலும், வீண் விரையம் செய்யாமலும் நடுநிலை வகிப்பதாகும். அல்லாஹ் கூறுகிறான்:

"﴿۞ يَٰبَنِيٓ ءَادَمَ خُذُواْ زِينَتَكُمْ عِندَ كُلِّ مَسْجِدٖ وَكُلُواْ وَٱشْرَبُواْ وَلَا تُسْرِفُوٓاْ ۚ إِنَّهُۥ لَا يُحِبُّ ٱلْمُسْرِفِينَ﴾:

"ஆதமின் மக்களே! ஒவ்வொரு தொழுமிடத்திலும் உங்களின் (ஆடைகளால்) அணிந்து அலங்கரித்துக் கொள்ளுங்கள். உண்ணுங்கள், பருகுங்கள்; ஆனால் வீண் விரையம் செய்யாதீர்கள். நிச்சயமாக அவன் வீண் விரையம் செய்பவர்களை நேசிப்பதில்லை." (அல் குர்ஆன் 7 : 31).

மற்றொரு வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்.

"வீண் விரயம் செய்யாதீர். நிச்சயமாக வீண் விரயம் செய்பவர்கள் ஷைத்தான்களின் சகோதரர்களாவார்கள்..." (அல் குர்ஆன் 17 : 26-27).

இன்று எத்தனையோ தண்ணீர் வீணடிக்கப்படுகிறது! தேவையின்றி மின் விளக்குகள் எரிகின்றன! உணவுகள் குப்பைத் தொட்டியில் வீசப்படுகின்றன! இந்த அருட்கொடைகளைப் பற்றி மறுமையில் விசாரிக்கப்படுவோம் என்பதை உணர்ந்தால் மனிதன் முறையான வழியில் பயன்படுத்துவான். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

« لَا تَزُولُ قَدَمَا عَبْدٍ يَوْمَ الْقِيَامَةِ حَتَّى يُسْأَلَ عَنْ عُمُرِهِ فِيمَا أَفْنَاهُ، وَعَنْ عِلْمِهِ فِيمَ فَعَلَ، وَعَنْ مَالِهِ مِنْ أَيْنَ اكْتَسَبَهُ وَفِيمَ أَنْفَقَهُ، وَعَنْ جِسْمِهِ فِيمَ أَبْلَاهُ»

"மறுமை நாளில் ஓர் அடியான் தன் வாழ்நாளை எதில் கழித்தான், தன் கல்வியைக் கொண்டு என்ன செய்தான், தன் பொருளை எவ்வாறு சம்பாதித்து எதில் செலவழித்தான், தன் உடலை எதில் சுமைக்கச் செய்தான் என்று விசாரிக்கப்படும் வரை அவனது இரு பாதங்களும் நகர முடியாது." (நூல்: திர்மிதி).

அருட்கொடைகளைப் பாதுகாக்கும் மற்றொரு வழி: அருட்கொடைகளின் உரிமைகளை (கடமைகளை) நிறைவேற்றுவதாகும். ஜகாத் மற்றும் தர்மங்கள் வழங்குவதன் மூலம் செல்வத்தின் அருட்கொடை பாதுகாக்கப்படுகிறது.

அல்லாஹ் கூறுகிறான். (நபியே) அவர்கள் தங்கள் குற்றத்திற்குப் பரிகாரமாகக் கொண்டு வந்திருக்கும் அவர்களுடைய பொருள்களிலிருந்து தர்மத்தை நீர் எடுத்துக்கொண்டு அவர்களை (உள்ளும் புறமும் பரிசுத்தமாக்கி வைத்து அவர்களுக்காக பிரார்த்தனை செய்வீராக. உங்கள் பிரார்த்தனை அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் அல்லாஹ் நன்கு செவியுறுபவன் நன்கறிபவன் ஆவான். (அல் குர்ஆன் 9:103)

மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "தர்மம் செய்வதால் செல்வம் குறைந்துவிடாது." (திர்மிதி)

கல்வி: அதனைப் பரப்புவதாலும் அதன்படி செயல்படுவதாலும் பாதுகாக்கப்படுகிறது.நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "(மார்க்க விஷயத்தில்) என்னை விட்டும் ஒரே ஒரு வசனமாக இருந்தாலும் பிறருக்கு எத்திவையுங்கள்." (நூல்: புகாரி).

செல்வாக்கு/அதிகாரம்: மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதன் மூலம் பாதுகாக்கப்படுகிறது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "மக்களில் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானவர், மனிதர்களுக்கு அதிகப் பயனளிப்பவராவார்." (நூல்: தப்ராணி).

நான் கூறுவதைக் கேட்டு அல்லாஹ்விடம் எனக்காகவும் உங்களுக்காகவும் பாவமன்னிப்புத் தேடுகிறேன்; நீங்களும் அவனிடம் பாவமன்னிப்புக் கேளுங்கள். நிச்சயமாக அவன் மிகவும் மன்னிப்பவனாகவும் நிகரற்ற அன்புடையோனாகவும் இருக்கிறான்.

## இரண்டாவது குத்பா

அகிலங்களின் இறைவனான அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும். அவனுக்கே அழகிய புகழும், சிறந்த துதியும் உரியது. வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை யாருமில்லை என்று சாட்சி கூறுகிறேன். அவன் சத்தியத்தைக் கூறுகிறான், நேர்வழியைக் காட்டுகிறான். முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதரும் ஆவார்கள் என்று சாட்சி கூறுகிறேன். அல்லாஹ் அவருக்கும், அவரது குடும்பத்தினர், தோழர்கள் அனைவர் மீதும் மறுமை நாள் வரை ஏராளமான சாந்தியும் சமாதானமும் பொழிவானாக!

**இறைதுதிக்குப் பின் :**

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள். அந்தரங்கத்திலும், தனிமையிலும் அவனை பயந்து கொள்ளுங்கள். அவன் பக்கமே நீங்கள் ஒன்று திரட்டப்படவுள்ளீர்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றிகெட்டத்தனமாக நடப்பது அருட்கொடைகளைப் பறித்துவிடும்.

﴿وَضَرَبَ ٱللَّهُ مَثَلًا قَرْيَةً كَانَتْ ءَامِنَةً مُّطْمَئِنَّةً يَأْتِيهَا رِزْقُهَا رَغَدًا مِّن كُلِّ مَكَانٍ فَكَفَرَتْ بِأَنْعُمِ ٱللَّهِ فَأَذَٰقَهَا ٱللَّهُ لِبَاسَ ٱلْجُوعِ وَٱلْخَوْفِ بِمَا كَانُوا۟ يَصْنَعُونَ"﴾

அல்லாஹ் ஓர் ஊரை உவமையாகக் கூறுகிறான்: அது பாதுகாப்பானதாகவும் நிம்மதியானதாகவும் இருந்தது; அதன் வாழ்வாதாரம் அனைத்து இடங்களிலிருந்தும் தாராளமாக வந்து கொண்டிருந்தது. ஆனால், அவ்வூரார்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றிக்கேடு செய்தது. அதனால், அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றின் காரணமாக அல்லாஹ் பசியையும் அச்சத்தையும் அவர்களுக்கு ஆடையாகச் சுவைக்கச் செய்தான்." (அல் குர்ஆன் 16:112).

காரூன் தன் செல்வத்தைப் பற்றி: "இது எனக்குள்ள அறிவின் காரணத்தினாலேயே கொடுக்கப்பட்டது" என்று கூறியபோது, அல்லாஹ் அவனையும் அவனது வீட்டையும் பூமியில் புதையச் செய்தான். (அல் குர்ஆன் 28 :76) அதன் விளைவாக அருட்கொடையை அருளியவனைக் காட்டிலும் அந்த அருட்கொடையிலேயே மூழ்கியிருப்பவர்கள் அனைவருக்கும் அவன் ஒரு பாடமாக விளங்க வேண்டும் என்பதற்காக அல்லாஹ் அவனையும் அவனது வீட்டையும் பூமிக்குள் புதைத்து விட்டான்.

எனவே, உணவுகளைக் குப்பையில் வீசாமலும், தண்ணீர் மற்றும் மின்சாரத்தை வீணடிக்காமலும், அல்லாஹ்வுக்கு மாறு செய்யும் காரியங்களில் செல்வத்தைச் செலவிடாமலும் நமது பிள்ளைகளுக்கும் நமக்கும் பயிற்சி அளிப்பது நமது கடமையாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

«إِنَّ اللَّهَ لَيَرْضَى عَنِ الْعَبْدِ أَنْ يَأْكُلَ الْأَكْلَةَ فَيَحْمَدَهُ عَلَيْهَا، أَوْ يَشْرَبَ الشَّرْبَةَ فَيَحْمَدَهُ عَلَيْهَا»

"ஒரு அடியான் ஒரு கவளம் உணவை உண்டுவிட்டு அல்லது ஒரு மிடறு நீரைக் குடித்துவிட்டு அல்லாஹ்வைப் புகழ்ந்தால், அல்லாஹ் அவனைக் குறித்து திருப்தியடைகிறான்." (நூல்: முஸ்லிம்).

யா அல்லாஹ்! ஈமானை (இறைநம்பிக்கையை) எங்களுக்குப் பிரியமானதாக்கி, அதனை எங்கள் உள்ளங்களில் அழகாக்குவாயாக! குஃப்ர் (இறைநிராகரிப்பு), பாவங்கள், மாறுசெய்தல் ஆகியவற்றை எங்களுக்கு வெறுக்கத்தக்கதாக்கி, எங்களை நேர்வழி பெற்றோரில் ஆக்குவாயாக! யா அல்லாஹ்! இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர் களையும் தாழ்த்திடுவாயாக! யா அல்லாஹ்! குவைத்தையும் அதன் மக்களையும் அனைத்துத் தீமைகள் மற்றும் அசம்பாவிதங்களிலிருந்தும் பாதுகாப்பாயாக! இந்நாட்டையும் ஏனைய அனைத்து முஸ்லிம் நாடுகளையும் பாதுகாப்பானதாகவும் அமைதியானதாகவும் ஆக்குவாயாக! யா அல்லாஹ்! எங்கள் அமீர் அவர்களுக்கும் அவரது துணை அமீர் அவர்களுக்கும் நீ விரும்பும் நற்செயல்களைச் செய்யத் தவ்ஃபீக் செய்வாயாக! அவர்களை நன்மை மற்றும் தக்வாவின் பால் வழிநடத்துவாயாக! எங்கள் இறுதிப் பிரார்த்தனையும் அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்! என்பதாகும்.

**(வெள்ளிக்கிழமை மாதிரிப் பிரசங்கத் தயாரிப்புக் குழு)**